சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:18.06.2025

PW1: நாகராஜன் த/பெ– பாண்டி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

வழக்கு சம்மந்தமான விபரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். பிராது 7 வது பாராவில் சொத்தின் முன்புறம் உள்ள பகுதியை 2ம் பிரதிவாதியும், சொத்தின் பின்புறம் உள்ள அறையை நானும் பயன்படுத்தி வருகிறோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் ஏற்கனவே வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டு முன்புறம் 2ம் பிரதிவாதியும், பின்புறம் நானும் குடியிருந்து வருகிறோம் என்கறு சொன்னால் சரியல்ல. ஏற்கனவே வாய்மொழி பாகப்பிரிவினை நடந்து தாவா சொத்துக்களை பிரித்து கொண்டதால் மீண்டும் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. பாண்டி மகன் பெருமாளை ஒரு தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது தாயார் பேபியம்மாள் உயிருடன் இருந்த போதே தனக்கு இருந்த பாகத்தினை 2ம் பிரதிவாதியின் தகப்பனார் ராதா கிருஷ்ணன் என்பவருக்கு விட்டு கொடுத்துவிட்டதால் அதனடிப்படையில் 2ம் பிரதிவாதியும், அவரது வாரிசுகளும் தாவா சொத்தில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி செல்லதத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தீர்வை மற்றும் மின்சார கட்டணங்களை 2ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் தான் செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல, நானும் சரிபாதி செலுத்தி வருகிறேன்.

அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.